# THE MADRAS LEGISLATIVE COUNCIL.

---

**Monday, the 28th February 1955.**

The House met in the Council Chamber, Fort St. George, at three of the clock, Mr. Chairman (THE HON. DR. P. V. CHERIAN) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## SHORT NOTICE STARRED QUESTION.

*New railway line from Virudhunagar to Manamadurai.*

* 208-A *Q*.—SRI V. V. RAMASWAMI : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the scheme for opening a new railway line from Virudhunagar to Manamadurai via Aruppukottai has been included in the Second Five-Year Plan;

(*b*) whether the scheme has been referred to the Madras Government for their suggestions; and

(*c*) if so, what their suggestions are?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" (*a*) The scheme for opening a railway line from Virudhunagar to Manamadurai via Aruppukottai was not recommended to the Government of India for inclusion in the Second Five-Year Plan. The Government of India's communication regarding the list of railway projects included in the Second Five-Year Plan has not been received.

" (*b*) No, Sir.

" (*c*) Does not arise."

SRI V. V. RAMASWAMI :—" மானாமதுரையிலிருந்து வேறு எதாவது ஊருக்கு ரயில் தொடர்பை ஏற்படுத்துவதற்கு சர்க்கார் திட்டம் போட்டிருக்கிறார்களா ? அப்படியிருந்தால் அருப்புக்கோட்டை வழியாக விருதுநகருக்கும், மானாமதுரைக்கும் ரயில் தொடர்பு ஏற்படுத்தும் திட்டம் தவிர வேறு எந்த திட்டமாவது மத்திய சர்க்காருக்கு இந்த சர்க்காரால் சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறதா ? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" மானாமதுரையிலிருந்து தூத்துக்குடிக்கு ஒரு ரயில் பாதை போடச் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. மொத்தம் 13 ரயில் பாதைகள் போடும்படி மத்திய சர்க்காருக்கு சிபார்சு செய்யப்பட்டிருக்கின்றன. அவற்றைப் படிக்கிறேன் :—

1 தேனி–கூடலூர் ஜங்ஷன்.

2 நெய்வேலி–விருத்தாசலம் ஜங்ஷன்—பிராட் கேஜ்.

3 சேலம்–பங்களூர் லைன்.

4 சின்ன சேலம்–செங்கல்பட்டு.

5 மங்களூர்–ஹஸ்ஸான் லைன்.

6 திருநெல்வேலி–குமரி முனை.
7 சேலம்–திருச்சிராப்பள்ளி லயன்.
8 மானாமதுரை–தூத்துக்குடி லயன்.
9 தஞ்சாவூர்–பட்டுக்கோட்டை லயன்.
10 காஞ்சீவரம்–வேலூர் லயன்.
11 சத்யமங்கலம்–சாம்ராஜ் நகர்.
12 தெல்லிச்சேரி–மைசூர் லயன்.
13 கொல்லங்கோடு–திருச்சூர்."

SRI A. SUBRAMANYAM :—" மொரப்பூரிலிருந்து கிருஷ்ணகிரி மார்க்கம் ஹோசூருக்குப் போடும்படியான லைன் திட்டத்தை இந்த ஐந்து வருஷத் திட்டத்திலே சேர்த்துக்கொள்ள மத்திய சர்க்காருக்கு நம் சர்க்கார் சிபார்சு செய்திருக்கிறதா ?"

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" நான் இந்தச் சர்க்கார் மத்திய சர்க்காருக்கு எந்தெந்த ரயில் பாதைகளைப் போடவேண்டு மென்று சிபார்சு செய்திருக்கிறார்கள் என்று சொன்னேன். அவற்றில் மூன்றாவது வருஷ திட்டமாக சேலம்–பங்களூர் லைன் சிபார்சு செய்யப் பட்டிருக்கிறது. அதிலே கனம் அங்கத்தினர் சொல்லக்கூடிய கோரிக்கையும் இணைக்கப்பட்டிருக்கிறதென்று நான் நினைக்கிறேன்."

SRI M. ETHIRAJULU :—" ஐந்து வருஷத் திட்டத்தில் கடலூருக்கும் பாண்டிச்சேரிக்கும் ரயில் பாதை போடப்படும் உத்தேசம் இருக்கிறதா ?"

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" அம்மாதிரி உத்தேசம் எதுவும் இல்லை."

## STARRED QUESTIONS.

### *Collections under the National Plan Loan from the South Arcot district.*

* 209 *Q.*—SRI M. ETHIRAJULU : Will the Hon. the Minister for Finance and Education be pleased to state the total amount collected under the National Plan Loan from South Arcot district during the years 1952–53 and 1953–54?

THE HON. SRI C. SUBRAMANIAM :—" The term ' National Plan Loan ' applies to the loan raised by the Government of India during the current year. Apparently the hon. Member has in mind the loans raised by the State Government during the years 1952–53 and 1953–54. If so, the figures are—

| | Total subscriptions in the South Arcot district. RS. (IN LAKHS.) |
|---|---|
| 4 per cent Madras Government Loan, 1964, issued in 1952–53 .. .. .. | 2·77 |
| 4 per cent Madras Government Loan, 1963, issued in 1953–54 .. .. .. | 5·73 " |

SRI V. V. RAMASWAMI :—" இந்தச் சர்க்காருக்கு அடுத்த ஆண்டில் கடன் எழுப்புவதற்கு யோசனை உண்டா ?"

THE HON. SRI C. SUBRAMANIAM :—" தனித் தனியாக கடன் எழுப்புவதா அல்லது இந்த வருஷம் போலவே மத்திய அரசாங்கத் தின் மூலமே கடன் எழுப்புவதா என்கிற யோசனை இன்னும் முடிவு செய்யப்படவில்லை."